# இந்திய ஊழல் ஒழிப்போர் கூட்டமைப்பு
# Federation of Anti - Corruption Teams - India (FACT India)

18-04-2010 அன்று நடைபெற்ற கருத்தரங்கில் நிறைவேற்றப்பட்ட **தீர்மானங்கள்**

1. பள்ளி மற்றும் கல்லூரிகளில் வசூ-க்கப்படும் கட்டாய நன்கொடை மற்றும் மறைமுக கல்வி கட்டணங்கள் மாணவர்கள் மனதில் ஒழுங்கீனத்தை வளர்ப்பதாக உள்ளது. சிறந்த ஒழுக்கத்தைப் பயிற்றுவிக்க வேண்டிய கல்வி நிறுவனங்கள் அதற்குமாறாக வியாபார நிறுவனங்களாகத் தங்களை மாற்றிவருகிறது. இத்தகைய இழி செயல் நாட்டின் வளர்ச்சிக்கு ஊறு விளைவிப்பதாக இருப்பதால் இந்த நடைமுறையை உடனடியாக நிறுத்துமாறு கல்வி நிறுவனங்களைக் கேட்டுக் கொள்வதுடன், தவறும் நிறுவனங்கள் மீது உரிய சீர்திருத்த நடவடிக்கை தொடருமாறு மத்திய, மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

2. மக்கள் தொகை கணக்கெடுப்பு நடக்கும் இத்தருணத்தில், அனைவருக்கும் குடியுரிமை எண் வழங்கி அதனை சான்றிதழ்கள், வாக்காளர் அட்டை, குடும்ப அட்டை, பணி நியமனங்கள், வங்கி கணக்குகள், வருமானவரி, சொத்து பரிமாற்றம் ஆகியவற்றிற்குப் பயன்படுத்த உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

3. பிறப்பு இறப்பு சான்றிதழ்கள் மற்றும் நிலப்பட்டா போன்றவை பதிவு செய்யப்பட்ட நாளி-ருந்து 15 தினங்களுக்குள், துறைகள் தாமாகவே முன் வந்து வழங்க உரிய நடவடிக்கை மேற் கொள்ளுமாறு மாநில அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

4. பள்ளி மற்றும் கல்லூரிகளில் தகவல் உரிமைச் சட்டம் உள்ளிட்ட சமுதாயக்கல்வி திட்டத்தை கட்டாயப் பாடமாக்க உரிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

5. தகவல் உரிமைச்சட்ட ஷரத்தின்படி, இச்சட்டத்தை பொது மக்களிடம் முழுமையாக விளம்பரப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும், அதனை பதிவு செய்யப்பட்ட சமூக நல அமைப்புக்களுடன் இணைந்து செயல்படுத்துமாறும் மத்திய மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

6. தகவல் உரிமைச்சட்ட பிரிவு 4,5 ஆகியவற்றின்படி முழுமையான, முறையான தகவல்களை வெளியிடாத துறைகளின் பொறுப்பான அலுவலர்களை தொடர்ச்சியாக கடமை தவறியவர்களாகக் கணக்கிட்டு பணியிடை நீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கை தொடருமாறு மத்திய, மாநில அரசுகளை கேட்டுக் கொள்கிறது.

7. அரசுத்துறை பணியாளர்கள் அவர்தம் குடும்பத்தினர் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் அவர்தம் குடும்பத்தினர் ஆகியோரின் சொத்து விவரங்களை அந்தந்த துறை சார்ந்த இணையதளத்தில் கட்டாயமாக வெளியிட நடவடிக்கை எடுக்குமாறு மத்திய மாநில அரசுகளைக் கேட்டுக் கொள்கிறது.

8. ஒரே வழக்கிற்குப் பல வழக்கு எண்கள் வழங்கியும், விசாரணை நடத்தாமல் கட்டளைகள் வழங்கியும், விசாரணை செய்யப்பட்ட வழக்கு ஒரு வருடம் ஆனபின்பும் தீர்ப்புகள் வழங்காமலும், தகவல் வழங்காத பொது தகவல் அதிகாரி மீது அபராதம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு உத்தரவிடாமலும், இத்தகைய செயல்களால் அரசுக்கு வரவேண்டிய சுமார் ரூ 150/- கோடி அபராதத் தொகையை இழக்கச் செய்தும், சட்ட நோக்கத்திற்கும் விதிகளுக்கும், மக்கள் உரிமைகளுக்கு எதிராகவும் செயல்பட்டு வரும் மாநில தகவல் ஆணையத்தை சீரமைக்க உடனடி நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

9. தகவல் உரிமைச் சட்டத்தைப் பயன்படுத்திய அனுபவமும் ஆற்றலும் உள்ள நேர்மையான சமூக ஆர்வலர்களை தகவல் ஆணையர்களாக நியமிப்பதுடன், அத்தகைய நியமனம் வெளிப்படையானதாக இருக்கவும் உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாநில அரசையும், ஆளுநரையும் கேட்டுக் கொள்கிறது.

10. லஞ்ச ஊழல் வழக்குகளுக்கு குற்றப்பத்திரிகை தயாரிக்க உடனடி அனுமதி வழங்காத பொறுப்பான அதிகாரி மீதும், அத்தகைய வழக்குகளை 6 மாத காலத்திற்குள் முடித்து தீர்ப்பு வழங்காத நீதிபதிகள் மீதும், கடமை தவறியவர்களாகக் கணக்கிட்டு ஒழுங்கு நடவடிக்கை தொடருமாறு மத்திய, மாநில அரசுகளை இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**பொதுச்செயலாளர்**